# முதல் BIMSTEC வர்த்தக உச்சிமாநாடு (ஆகஸ்ட் 06-08, 2024)

ஆகஸ்ட் 05, 2024

1. இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) உடன் இணைந்து இந்திய அரசின் வெளியுறவு அமைச்சகம், 2024 ஆகஸ்ட் 6 முதல் 8 வரை புதுதில்லியில் முதல் BIMSTEC வர்த்தக உச்சி மாநாட்டை நடத்துகிறது.

2. இந்த வர்த்தக உச்சிமாநாட்டின் முதல் பதிப்பு, பன்முகத் துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (BIMSTEC) உறுப்பு நாடுகளிடையே வலுவான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளின் மூலம் பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3. இந்த வர்த்தக உச்சி மாநாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர். எஸ். ஜெய்சங்கர். வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் மற்றும் பிற தலைவர்கள் முக்கிய உரையாற்றுவார்கள். BIMSTEC உறுப்பு நாடுகளின் வர்த்தகம், வணிகம் மற்றும் தொழில்துறை மற்றும் எரிசக்தி துறை அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், கொள்கை வகுப்பாளர்கள், தொழில் முனைவோர் மற்றும் தொழில் சங்கங்கள் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளனர்.

4. வங்காள விரிகுடா பிராந்தியத்தைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட முக்கிய பங்குதாரர்களை இந்த நிகழ்வு ஒன்றாகக் கொண்டுவருவதோடு, பொருளாதார ஒத்துழைப்பை எளிதாக்குவதற்கும், வர்த்தக வசதி, பிராந்திய இணைப்பு, எரிசக்தி பாதுகாப்பு, உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நிலையான வளர்ச்சி போன்ற கவனம் செலுத்தும் பகுதிகளில் முன்னோக்கி செல்லும் வழிகளை ஆராய்வதற்கும் இது உதவும்.

5. தெற்காசியாவின் ஐந்து நாடுகளையும் (பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், இந்தியா மற்றும் இலங்கை) மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் இரண்டு நாடுகளையும் (மியான்மர் மற்றும் தாய்லாந்து) இணைக்கும் பன்முகத் துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (BIMSTEC) வங்காள விரிகுடா முன்முயற்சிக்கு இந்தியா மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறது.

**புது தில்லி**
**ஆகஸ்ட் 05, 2024**